# குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி

## ஆறாம் திருமொழி - ஏர்மலர்ப்பூங்குழல்
## ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்தல்

** ஏர்மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர் *
எனைப் பலர் உள்ள இவ்வூரில் * உன்தன்
மார்வு தழுவுதற்காசை இன்மை
அறிந்தறிந்தே * உன்தன் பொய்யைக் கேட்டு **
கூர்மழை போல் பனிக்கூதல் எய்திக் *
கூசி நடுங்கி யமுனை ஆற்றில் *
வார்மணல் குன்றில் புலர நின்றேன் *
வாசுதேவா! உன் வரவு பார்த்தே 1

கெண்டை ஒண்கண் மடவாள் ஒருத்தி *
கீழை அகத்துத் தயிர் கடையக்
கண்டு * ஒல்லை நானும் கடைவன் என்று *
கள்ள விழியை விழித்துப் புக்கு **
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ *
வாள்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்ப *
தண்தயிர் நீ கடைந்திட்ட வண்ணம் *
தாமோதரா! மெய்யறிவன் நானே 2

கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக் *
கடைக்கணித்து * ஆங்கே ஒருத்தி தன் பால்
மருவி மனம் வைத்து மற்றொருத்திக்கு
உரைத்து * ஒரு பேதைக்குப் பொய் குறித்து **
புரிகுழல் மங்கை ஒருத்தி தன்னைப்
புணர்தி * அவளுக்கும் மெய்யன் அல்லை *
மருதிறுத்தாய்! உன் வளர்த்தியோடே *
வளர்கின்றதால் உன்தன் மாயை தானே 3

தாய்முலைப் பாலில் அமுது இருக்கத் *
தவழ்ந்து தளர்நடை இட்டுச் சென்று *
பேய்முலை வாய் வைத்து நஞ்சை உண்டு *
பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய் **
ஆய்மிகு காதலோடு யான் இருப்ப *
யான் விட வந்த என் தூதியோடே *
நீ மிகு போகத்தை நன்குகந்தாய் *
அதுவும் உன் கோரம்புக்கேற்குமன்றே 4

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு *
வீங்கிருள்வாய் என்தன் வீதியூடே *
பொன்னொத்த ஆடை குக்கூடல் இட்டுப் *
போகின்ற போது நான் கண்டு நின்றேன் **
கண்ணுற்றவளை நீ கண்ணால் இட்டுக் *
கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன் *
என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய்? *
இன்னம் அங்கே நட நம்பி! நீயே 5

மற்பொரு தோளுடை வாசுதேவா! *
வல்வினையேன் துயில் கொண்டவாறே *
இற்றை இரவிடை ஏமத்தென்னை *
இன்னணை மேலிட்டகன்று நீ போய் **
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும் *
அரிவையரோடும் அணைந்து வந்தாய் *
எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்? *
எம்பெருமான்! நீ எழுந்தருளே 6

பையரவின்னணைப் பள்ளியினாய்! *
பண்டையோம் அல்லோம் நாம் * நீ உகக்கும்
மையரி ஒண்கண்ணினாரும் அல்லோம் *
வைகி எம் சேரி வரவொழி நீ **
செய்ய உடையும் திருமுகமும் *
செங்கனி வாயும் குழலும் கண்டு *
பொய் ஒரு நாள் பட்டதே அமையும் *
புள்ளுவம் பேசாதே போகு நம்பீ! 7

என்னை வருக எனக் குறித்திட்டு *
இனமலர் முல்லையின் பந்தர் நீழல் *
மன்னி அவளைப் புணரப் புக்கு *
மற்று என்னைக் கண்டு உழறா நெகிழ்ந்தாய் **
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப் *
பொய் அச்சம் காட்டி நீ போதியேலும் *
இன்னம் என் கை அகத்து ஈங்கொரு நாள் *
வருதியேல் என் சினம் தீர்வன் நானே 8

மங்கல நல்வனமாலை மார்வில் இலங்க *
மயில் தழைப்பீலி சூடி *
பொங்கிள ஆடை அரையில் சாத்திப் *
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து **
கொங்கு நறும் குழலார்களோடு *
குழைந்து குழல் இனிதூதி வந்தாய் *
எங்களுக்கே ஒரு நாள் வந்தூத *
உன் குழல் இன்னிசை போதராதே 9

** அல்லிமலர்த் திருமங்கை கேள்வன்
தன்னை * நயந்து இளவாய்ச்சிமார்கள் *
எல்லிப் பொழுதினில் ஏமத்தூடி *
எள்கி உரைத்த உரை அதனை **
கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான் *
குலசேகரன் இன்னிசையில் மேவி *
சொல்லிய இன்தமிழ் மாலை பத்தும் *
சொல்ல வல்லார்க்கில்லை துன்பம் தானே 10

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---